(ஆ) புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு மேல் நிலை வகுப்பு துவங்க ரூ. 25,000 பொதுமக்கள் நிதி கட்டவேண்டிய அவசியமில்லை என்ற விதி விலக்களிக்கும் கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மானியம்

*வினா எண். 767 திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) +2 வகுப்புகள் நடத்தும் தனியார் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் அரசு மான்யமாக அளிக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகை பள்ளிக்குப் பள்ளி மாறுபடுகின்றதா? அல்லது சம தொகையே எல்லாப் பள்ளிகளுக்கும் அளிக்கப் படுகிறதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் சம்பளத் தொகை முழுவதையும் போதனா மானியமாக ஒவ்வொரு மாதமும் அளிக்கப்படுகிறது.

(ஆ) தனியார் நிர்வாகத்தின் கீழுள்ள மேல்நிலை வகுப்புகளில் பணிபுரியும் நிர்ணயிக்கப் பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் அரசு நிர்ணயித்துள்ள சம்பள விகிதத்தின்படி ஒவ்வொரு மாதமும் மானியம் வழங்கப்படுகிறது. அதனால் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மானியத் தொகையில் வித்தியாசம் ஏற்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் பிளஸ்—2 வகுப்புகளில் சேர்ந்திருக்கிற மாணவர்கள் ஃபர்ஸ்டு (முதல்) குரூப்பில், மேத்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பயாலஜி முதலியவைகளை எடுத்துக் கொள்ளப் படலாம் என்றுள்ளது. செகண்ட் குரூப்பில் மேத்ஸ் கிடையாது. ஆனால் பெற்றோர்களால் எங்களுக்குத் தரப்பட்ட தகவல்களின் படி வருகிற எம்.பி.பி. எஸ் தேர்வுக்கு மேத்ஸ் இருந்தால்தான் இடம் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஃபர்ஸ்ட் குரூப்பில் இடமில்லாவிட்டால் செகன்ட் குரூப்பில் சேரும் மாணவர்களுக்கு மேத்ஸ் இல்லாமல் எம். பி.பி.எஸ்.சில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியத் தொகை இவ்வளவுதான் என்று அறிவித்துள்ளபடி அரசு தருகிறதா என்பதைப் பற்றியெல்லாம் கேளுங்கள். நீங்கள் ஏதோ சம்பந்தம் இல்லாமல்....

1979 ஏப்ரல் 21]

திரு. மு. ஜான் வின்சென்ட் : பர்ஸ்ட் குருப்பில் மேத்ஸ் வருகிறது, செகண்ட் குருப்பில் மேத்ஸ் இல்லை. அப்படிப் படிக்கின்ற மாணவர்களுக்கு பின்னால் கல்லூரியில் படிக்கச் செல்லும்போது ஏதும் இடைஞ்சல் வராமல் இருக்குமா? வந்தால் அதைத்தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளி களுக்கு அரசு மானியம் அளிக்கும் தொகை எவ்வளவு? மாறு படுகிறதா இல்லையா என்பது பற்றித்தான் கேள்வி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சேகரித்து தயாரித்து அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர் விடுதி

*வினா எண் 768 திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதி எந்தவிதமான வசதியும் இல்லாத தனியார் கட்டிடத்தில் இருப்பது தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஆம்.

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி விடுதி கட்டிடம் கட்டுவதற்கென நிதியுதவியளித்து அரசினர் ஆணை பிறப்பித் துள்ளனர். இவ் விடுதிக் கட்டிடம் துரிதமாக இவ்வாண்டே கட்டி முடிப்பதற்கென தகுந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி கட்டிடம் புதிதான இடத்தில் கட்டப் படுமா? அல்லது ஏற்கெனவே உள்ள இடத்தில் கட்டப்படுமா? அல்லது கல்லூரி காம்பவுண்டிங்குள்ளேயே கட்டப்படுமா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதி தற்போது மூன்று தனியார் இடங்களில் இருந்து வருகிறது. தற்போது விடுதி கட்டும் திட்டத்திற்கு 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS